# ஆயர் மடல்.....

அன்புக்குரியவர்களே,

இனிய ஆன்மீக வசந்தகால வாழ்த்துக்கள்.
(Happy Lenten Season)

இயற்கையில் மரங்களுக்கு வழுக்கை விழும் ஆனால் துளிர்க்கும், புதிய பசுமையான இலைகள், துளிர்கள், நறுமணம் பரப்பும் வண்ண ,வண்ண மலர்கள், சுற்று சூழலையே மாற்றியமைக்கும் இனிய வசந்தகாலம் மனமகிழ்ச்சியின் காலம். இதைப்போலவே நம்முடைய கிறிஸ்தவ ஆவிக்குரிய வாழ்க்கையில் மரங்களுக்கு வழுக்கைவிழுந்து பின்பு அதிசயமாக துளிர் விடுவது போல, நாம் உண்மையாக இந்த ஆன்மீக வசந்த காலத்தில் நம்மை தேவனுக்கு முழுமையாக ஒப்புக்கொடுத்து, இந்த லெந்து காலத்தை திருச்சபையோடு அனுசரிக்கும் போது நாமும் உருமாற்றம் அடைவோம்.( If We are ready to observve this season of Lent sincerely and seriously ,surely you will experience budding and flowering, fragrance in your life) . ஆதலால் இந்த லெந்து காலத்தை பய பக்தியோடு ஆசரிப்போம். மன்னா அட்டையில் உள்ளது போல ஏசாயா 55:7 ன் படி இந்த உலகத்தை விட்டு தேவனை நோக்கி திரும்புவோம்.

இப்படிக்கு,
உங்கள் ஆயர்,
Rev. Christopher Rajendran.

# *Meditation* (தியானம்)

அன்பிற்குரியவர்களே ,

தியான வசனம்: 2 கொரிந்தியர் 7:10.(2 Corin 7 :10 ).

"தேவனுக்கேற்ற துக்கம், உலகத்திற்கேற்ற துக்கம்"
(Godly Sorrow and Worldly Sorrow)

**ஆ**ன்மீக வசந்த காலத்தை மனமகிழ்ச்சியோடு இருகரம் நீட்டி வரவேற்போம். உங்கள் யாவரையும் மனம் திரும்ப அழைக்கிறேன். Christian Believers are the only People in the World , Who can continually repent. நாம் நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில் முன்னேற ஒவொரு நாளும், ஒவ்வரு நிமிடமும் மனம் திரும்ப வேண்டும்.

1கொரிந்தியர் 1:18 - 25 ன் படி நற்செய்தியைப் போல அனுதின மனம் திரும்புதல் தேவ பெலனாய், தேவ ஞானமாய் இருக்கிறது. The Richest men and women in The world are repenting men and women at every moment . Salvation of their Soul is Well Secured. Christians secret weapon for their Success is Repentance at every moment.

பரிசுத்த பவுல் 1கொரிந்தியரில் மிக கடிந்து, கண்டித்து எழுதியதால் மிக துக்கத்தில் இருந்த விசுவாசிகள், பின்பு மனம் திருந்தியதை கேள்விப் பட்ட பவுல் தேவனுக்கேற்ற துக்கம் எப்படிப்பட்ட நல்ல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை கொண்டு வருகிறது என்பதை குறித்து எழுதுகிறார்.

தேவனுக்கேற்ற துக்கம்:

பாவத்தில் துணிகரமாக ஈடுபட்டு, பின்பு தேவனால், தேவனுடைய ஊழியர்களால், தேவனுடைய வார்த்தை

களால் உணர்த்தப்படும் பொழுது, பயபக்தியோடு, தான் செய்த குற்றத்தை தானே முழுமையாக ஏற்றுக்கொண்டு மனஸ்தாபப்படுவதும், பாவ அறிக்கையை தேவனிடத்தில் அறிக்கையிடுவதும், இனி இந்த பாவத்தை ஒரு போதும் துணிகரமாக செய்ய மாட்டோம் என்று தீர்மானம் எடுப்பதும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மைகளை செய்து அவர்களோடு ஒப்புரவு ஆவதுமே உண்மையான தேவனுக்கேற்ற துக்கமாகும். வேதத்தில் கெட்ட குமாரன், தாவீது போன்றவர்கள் இவ்வாறு தேவனுக்கேற்ற துக்கம் அடைந்து மனம்திரும்பினார்கள். இவர்கள் பிற்பாடு துக்கம் அடையாமல் தேவனிடத்தில் அநேக ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டார்கள், அதுபோல நாமும் இந்த லெந்து காலத்தில் துணிகரமாக நாம் செய்து கொண்டிருக்கும் பாவங்களை தேவனுக்கு ஏற்ற துக்கத்தோடு உணர்ந்து மனம் திருந்துவோம், மன்னிப்பு கேட்போம் தேவனிடத் திலும்,பிறரிடத்தில் ஒப்புரவவோம். அநேக ஆவிக்குரிய, சரீரத்திற்குரிய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வோம்.

உலகத்திற்கேற்ற துக்கம்:

இது சற்று வித்தியாசமானது. துணிகரமாய் செய்த பாவத்தை உணராமல், அது தேவனுக்கு எதிராக செய்தது என்பதை உணராமல், பிறருடைய பாதிப்பையும் உணரா மல், கஷ்டத்தையும், மன வேதனையையும் உணராமல், செய்த குற்றத்தின் விளைவால் தனக்கு தண்டனை வந்து விடுமோ என்ற பயத்தில் துக்கப்பட்டு, வேதனைப் படுவது தான் உலகத்திற்கேற்ற துக்கம். இது உண்மை யான மனம் திரும்புதலை கொண்டு வராது, மாறாக இது அதிக மன நோயை, உடல் நோயை கொண்டு வந்து தற்கொலையை, மரணத்தை கொண்டு வரும். இதற்கு சவுல், ஆகாப்

ராஜாக்களும், யூதாஸ் காரியோத்துக்களும் முன்னுதாரணமாக இருக்கிறார்கள். இது சுய பரிதாபத்தை, சுயத்தை வெளிப்படுத்தும், பிறர் நம்மை பற்றி என்ன நினைப்பார்கள்? நம்முடைய புகழ், பெருமை, கௌரவம் கெட்டு விடுமே என்ற எண்ணத்தில் பவாறிக்கை செய்யமல், தேவனிடத்தில் மனம் திரும்பி மன்னிப்பை,விடுதலையை, கோராமல், பாதிக்கப்பட்ட நபர்களை பற்றி யோசிக்காமல், தன்னை பற்றியே யோசித்து யோசித்து, மன நோய் கொண்டு மரணத்துக் கேதுவாய் இருப்பார்கள். ஆதலால் colossians 3 : 5 -12 , ephesians 4 : 22 -24 ன் படி நாம் இந்த லெந்து காலத்தில் ஒவ்வொரு நிமிடமும் தேவனுக்கேற்ற துக்கம் அடைந்து, மனம் திரும்பி ரட்சிப்பின் சன்தோஷத்தை, சமாதானத்தை, நித்ய ஆசீர்வாதங்களை சுதந்தரித்து கொள்வோம்.

**ஆன்புடன்.**
**உங்கள் ஆயர்**
Rev. Christopher Rajendran.

# <u>*Projects for January 2018*</u>

## **Congregation**:

மிஷனறி ஒருவரை குறித்து சுருக்கமாக ஒரு தொகுப்பு எழுதவும். சிறந்த தொகுப்பு வரும் மாத மன்னாவில் இடம் பெறும்.

## **Womens fellowship:**

“லெந்து நாட்களில் குடும்பத்தில் ஆன்மீக வசந்தத்தை எவ்வாறு கொண்டு வருவது”. இதைக்குறித்து விவாதிக்கப்படம். ஊற்சாகத்தோடு கலந்துகொள்ளுங்கள்.

**Mens Fellowship :**

லெந்து நாட்களில் குடும்பத்தில் என்னென்ன மாற்றங்களை கொண்டு வந்தால் ஆன்மீக வசந்தத்தைக் கொண்டு வரலாம், என்று விவாதிக்கப்படும். ஆயத்தத்தோடு கலந்து கொள்ளவும்.

**Youth Fellowship :**

ஒரு உண்மையான கிறிஸ்தவ வாலிபனுடைய வாழ்க்கை முறை எப்படி இருக்க வேண்டும் இந்த லெந்து நாட்களில்.
Attend with your one page written material.

**Junior Church** :

Picturize Spring season in Nature .Ex: trees drop their old leaves and sprout, flowering .

## *செயலரிடமிருந்து........*

**கி**றிஸ்துவுக்குள் அன்பானவர்களே! இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன்.

அருமையானவர்களே, புதிய வருடத்தின்ஒரு மாதத்ததை கடந்து வந்து விட்டோம். தேவன் நம் ஒவ்வொருவரையம் ஆசீர்வாத்தின் பாதையில் வழி நடத்தி வந்திருப்பார் என்று நம்புகிறேன்.

கடந்த மாதம் 12-ம் தியதி நமது பிள்ளைகட்கான Junior Church மீண்டுமாக ஆரம்பிக்க தேவன் கிருபை செய்தார். பிள்ளைகளை ஏற்ற வேளையிலே அனுப்பி இந்த ஊழியம் ஆசீர்வாதமாக நடைபெற அனைவரும் ஒத்துழைப்போம். மேலும் Junior Church பிள்ளைகட்கும் ஆசிரியர்கட்கும் தேவையான அனைத்து பாட புத்தகங்களையும் இந்தியாவிலிருந்து வாங்கி வந்த Mrs.Sunitha அவர்கட்கும் நமது நன்றிகளை ஏறெடுப்போம்.

அது போன்று 26-1-18 அன்று திருச்சபையின் சார்பில் ஒரு

இனப சுற்றுலா சென்று வர தேவன் கிருபை புரிந்தார். இந்த சுற்றலாவின் பொறுப்பாளராக செயல் பட்ட திருச்சபையின் உபதலைவர் திரு.ராஜவேல் அவரோடு இணைந்து செயல் பட்ட மற்றும் கலந்து கொண்ட ஒவ்வொருவருக்கும் எனது உளமார்ந்த நன்றிகள்.

மேலும் இந்த மாதம் நாம் நடத்த திட்டமிட்டிருக்கும் கன்வென்ஷனுக்காக ஜெபிபபோம். அது போன்று தொடர்ந்து வரும் நாட்களின் எல்லா ஊழியங்களிம் இணைந்து செயல்படுவோம். தேவன் நமக்கு அப்பேர்பட்ட வாய்ப்பினை அருள ஜெபிப்போம்.

***M. நேசமணி.***

## <u>பெண்கள் ஐக்கியச் சங்கம்</u>

*அன்புக்குரிய தாய்மார்களே,*

**நாம்** நம்மை புதிப்பிக்கற ஒரு காலத்திற்குள் வந்திருக்கி றோம். பொதுவாக பெண்கள் பூவைப் போன்ற மென்மையா னவர்கள். இந்த லெந்து காலத்தில் பூத்து குலுங்க பெண்கள் அழைக்கப் படுகிறோம். அதற்கு நாம் செய்ய வேண்டிய காரியம் முழுமையாக ஒரு மரத்தை போல உருமாற்றம் அடைய வேண்டும். கடந்த பெண்கள் ஐக்கிய சங்கத்தில் பல தீர்மானங்களை எடுத்திருக்கிறோம்

1. பிறருக்காக ஜெபிப்பது, நாம் மகளிர் ஐக்கியமாக ஜெபிக்க, ஜெபிக்க, பிறருடைய பாரங்களை தேவ சமூகத்தில் இறக்கி வைக்கும்பொழுது அது பிறருக்கு மாத்திரமல்ல, நமக்கும் பரலோக பொக்கிஷமாக சேர்த்து வைக்கப்படுகிறது.

2. மன்னாவில் பெண்கள் ஐக்கிய சங்க பகுதியில் சாட்சிகளை தேவ நாம மகிமைக்கென்று எழுதுவது.

3. புதிய பாடல்களை ஆராதனையில் பாடுவது.

4. வீட்டுக்குறிப்புகளை எழுதுவது.புதிய சமையல் குறிப்புகள்,மற்றும் ஊட்டச்சத்துக்களை குறித்து, உடல் ஆரோக்கியத்தை குறித்து எழுதுவோம்.

5. Retreat for young women yearly once.

6. மாதம் ஒரு முறை வீடு சந்திப்பு .இந்த தீர்மானங்களை இந்த லெந்து காலத்தில் செயல் படுத்தி ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வோம்.

உங்கள் ஆயரம்மா

*Mrs.Angel C.R.*

## மானிட பொறுப்பு

**ஆ**கையால் நமக்கு கிடைக்கும் சமயத்திற்க்கு தக்கதாக யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத் தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம். (கலா. 6:10).

யாருக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதை பவுல் தெளிவாக கூறுகிறார். நன்மையைப் பெறுவதற்குப் பாத்திர வான்கள் யார் என்பதை இரு வகையாகப் பிரித்துக் கூறு கிறார். யார் அந்த இரு கூட்டத்தார்?

**முதலாவதாக**, உலகில் உள்ள அனைத்து மனிதர்களையும் குறிப்படுகிறார். இரண்டாவதாக, விசுவாசி களையும் குறிப்படுகிறார். உலகில் நாம் நன்மை செய்யும் போது, நல்லவர்கள் யார் கெட்டவர்கள் யார் என்பதை அடையாளம் கண்டு செய்யக்கூடாது. பட்சபாதமின்றி நன்மை செய்வது இயேசுவின் இயல்பாகும்.(மத். 5:45). ஆகவே தேவனுடைய பிள்ளைகளும் அப்படிப்பட்ட இயல்பை பெற்றிருக்க வேண்டும். உலக மனிதர்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருப்பினும் கிறிஸ்தவர்களிடம் நன்மை

பெறுவதற்க்கு பாத்திரவான்கள் ஆவர். முகம் பார்த்து நன்மை செய்யக்கூடாது.

பட்சபாதமில்லாமல் நாம் நன்மை செய்வதை காணும் உலகத்தார் தேவனை மகிமைப்படுத்தவும் இரட்சிக்கப்படவும் அதிக வாய்ப்பு உள்ளதே (மத். 5:16). ஆகவே உலகில் உள்ள யாவருக்கும் நாம் உண்மையான மனதுடன் நன்மை செய்யவேண்டும்.

**இரண்டாவதாக**, “விசேஷமாக விசுவாக குடும்பத் தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்” எனக் கூறப்பட் டுள்ளது. யார் இந்த விசுவாச கூட்டத்தார்கள்? விசுவாசக் கூட்டத்தார் என்பது இரட்சிக்கப்பட்ட சபையில் இணைந்துள்ள விசுவாசிகளைக் குறிக்கிறது. அவர்கள் தேவனுடைய வீட்டார் எனவும் அழைக்கப்படுகிறார்கள் (எபே. 2:19). ஆகவே, விசுவாசிகள் மற்ற விசுவாசிகளுக்கு உண்மையாக நன்மை செய்ய வேண்டும். தங்களது சொந்த குடும்பத்தார்களாகிய உடன் விசுவாசிகளுக்கே நன்மை செய்யாதோர் உலகத் தாருக்கு எவ்வாறு நன்மை செய்வார்கள்?

“நமக்குக் கிடைக்கும் சமயத்திற்க்குதக்கதாக” என்பது நமக்கு கிடைக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் குறிக்கிறது. நன்மை செய்யும்படியான சந்தர்ப்பம் நமக்கு கிடைக்கும்போது அதைத் தவறவிடக்கூடாது (நீதி. 3:27). உயிரோடிருக்கும்போது மட்டுமே நம்மால் நன்மை செய்ய முடியும் மரணத்திற்கு பின்பு நம்மால் நன்மை செய்ய இயவாது (பிர. 9:10). நல்லவன் தனக்குக் கிடைக்கும் சந்தற்பத்தை பயன்படுத்தி நன்மை செய்வான். கிறிஸ்தவன் நன்மை செய்யும்படியான சந்தர்ப்பத்தை உருவாக்கி நன்மை செய்வான்.

ஆகவே நாமும் சந்தர்ப்பத்தை உருவாக்கி மற்றவருக்கு நன்மை செய்ய பழகிக்கொள்வோம்.

- **நெல்சன் சோபித ராஜ்.**

# எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம்

**ம**லைகளும் காடுகளும் நிறைந்த கேரளா மாநிலத்தில் மூணாறு என்ற இடத்திற்கு தேவராஜ் என்பவர் குடும்பமாக சுற்றுலா சென்றார். மெய் சிலிர்க்க வைக்கும் கடுங்குளிரின் மாலைப் பொழுதில் தேவராஜும் அவருடைய மகனும் மலை ஏறிக்கொண்டிருந்தார். அங்கே அவருடைய மகன் திடீரென கீழ விழுந்து காயப் பட ஐய்யோ என்றான். அவனுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கும் படி மலையில் எங்கேயோ இருந்து வந்த சத்தம் ஐய்யோ என்றது. சற்று கோபமாக திரும்பி அப்பாவை பார்த்தான், அவர் இல்லை என்று புரிந்து கொண்டான்…

அவரோ! அவனுக்கு பட்ட காயத்தை தன் கையால் தடவிக் கொண்டிருந்தார். தன்னை ஏழனமாக சொன்ன அந்த சத்தத்திடம் உரத்த சத்தமாக நீ யார்? என்றான்.. அந்த கேள்விக்கு அங்கே இருந்து வந்த பதில் நீ யார்? என்றது. தந்தையோ எதுவும் தெரியாதது போல வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். நீ என்னை ஏளனம் பண்ணுகிறாயா! என்றான்... அதுவும் நீ என்னை ஏளனம் பண்ணு கிறாயா! என்ற அதே வார்த்தையை மீண்டும் சொல்ல.. ஏ நாயே! ஏன்றான். அதுவும் பதிலுக்கு ஏ நாயே! என்றது. தன்னுடைய அப்பாவைப் பார்த்து இது என்ன சத்தம் அப்பா! நீங்க ஒன்றும் சொல்லவே இல்லையே இந்த சத்தம் மலையிலிருக்கும் அரக்கர்களா என்றான்?

அவர் சிரித்துவிட்டு அந்த சத்தத்தை நன்றாக கவனித்துப் பார் நல்லதை சொன்னால் அதுவும் நல்லதையே சொல்லும் என்றார். உடனே அவன் நான் உன்னை காண ஆசையாயிருக்கிறேன் என்றான் அதுவம் நான் உன்னை காண ஆசையாயிருக்கிறேன் என்றது. இவனுக்கு ஒரே ஆச்சரியம். யார் அப்பா என்று மிகவும் ஆசையோடு கேட்டான்… நீ எதைப் பேசுகிறாயோ அது மலையில் அப்படியே பட்டு எதிரொலியாக மீண்டும் உனக்கு கேட்கிறது அவ்வளவு தான் வேறு யாரும் பேசவில்லை என்றார்.

தேவராஜ் இந்த தருணத்தை பயன்படுத்தி தன் மகனுக்கு ஒரு காரியத்தை கற்றுக் கொடுத்தார். வாழ்க்கையும் அப்படி தான் தம்பி எதை பேசுகிறாயோ அல்லது எதை செய்கிறாயோ அது அப்படியே ஏற்ற நேரத்தில் நம்மிடத்தில் திரும்பிவரும். நீ அன்பை எதிர்பார்த்தால், மற்றவர்களிடத்தில் நீ அதிகமாக அன்பு கூறு. நீ சமாதானத்தை எதிர் பார்த்தால் மற்றவர்களோடு நீ அதிகமாக சமாதானமாக இரு. இப்படி நாம் எந்த அளவுக்கு நம்முடைய வாழ்க்கையிலிருந்து நன்மைகளை கூட்டி வழங்குகிறோமோ அந்த அளவுக்கு நமக்கு நிச்சயமாக திருப்பி கிடைக்கும். தீமையை வழங்கும் பொழுது அதுவும் திரும்பி வரும். பார் தம்பி பரிசுத்த வேதாகமம் இப்படி சொல்லுகிறது மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்.கலா-6:7,8

*அன்பானவர்களே!* அன்று யாக்கோபு தன்னுடைய அண்ணன் ஏசாவைப் போல ரோம வஸ்திரம் தரித்து ஈசாக்கை ஏமாற்றினான்…
கொஞ்ச நாட்களுக்கு பின்பு யாக்கோபின் பிள்ளைகள் யோசேப்பு மரித்துவிட்டான் என்று அவனுடைய வஸ்திரத்தை காட்டி துஷ்ட மிருகம் அவனை பீறி போட்டது என்று ஏமாற்றினார்கள்…

"நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம்"
நாம் நன்மை செய்தால் மேன்மை இல்லையோ?

*M.நேசமணி*

**இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். உடனே அவன் பார்வையடைந்து, வழியிலே இயேசுவுக்குப் பின்சென்றான்.** மாற்கு 10 52

# Story time

## Honor your Father and Mother
## "Daddy the Superhero"

**B**randon and Sean loved superheroes. They loved Superman and Batman and the Fantastic Four and dozens and dozens more. Their rooms were overflowing with action figures and comic books of all of the most amazing super heroes in the imaginary world and they knew their names and their stories to the tiniest little detail. “Tell me the favorite thing you like about a superhero.” Mommy asked them as they settled in for their evening devotionals. “Well,” Sean started. “They always defeat evil. Evil monsters and people who want to hurt innocent people are always wiped out by superheroes when they use their superhuman powers.” He said making punching thrusts into the air sitting on the couch with mommy in his footy pajamas. “What I like is that superheroes are never afraid and always know what to do.” Brandon added looking into space like he could see his favorite superhero right there in front of him. “Well I am going to tell you of a real superhero that you live with. We will call him SUPERDADDY.” Mommy said happily. The boys burst into laughter. They thought of their daddy as someone who sat at his computer working, a shy gentle man with his hair starting to go away. “Daddy isn’t a superhero!” They said together. “Well right after you boys were born, daddy and I received Jesus and now Jesus is in our hearts. You know that don’t you.” Mommy said and both boys nodded. “Well Satan didn’t want us to have wonderful boys like you who would be raised to serve God. One day, daddy got up and in his spiritual eyes, he saw the house was full of evil creatures lurking around trying to find ways to stop God from doing His will in our lives. Suddenly from far away, daddy heard the trumpet call coming from heaven that was going to have war with Satan and his demons to defeat them. Right away daddy put on his superhero armor. He used the sword of the word of God. And the breastplate of righteousness. Our living room was changed into a huge battleground between Satan and God’s servants. Your daddy led the attack charging forward shouting the battle cry. “IN THE NAME OF JESUS.” The enemy tried to attack. They swarmed around him. Oh, they were nasty and ugly little evil things. They were angels who fell with Satan and demons and evil spirits like Jesus cast out of people in

the Bible." "Oh mommy, I would be so scared to see demons like that." Sean said his voice quivering thinking of how brave SUPER DADDY must have been. "Well SUPER DADDY was filled with the Holy Spirit so he had the boldness of God in him." Mommy continued. "He stabbed with the word of God's word sending the demons howling from the battle. Once an army of evil things tried to attack our family and daddy used the super weapon of praise. Raising his mighty sword into the air, he sang the praises of Jesus and the evil spirits ran in fear from him. The fire of the Holy Spirit like we read about in Acts was shooting from daddy's sword and the ends of his fingers because he was full of God's power and anointing to fight evil. Finally, SUPERDADDY stood face to face with the prince of all that was evil himself. "The devil himself? How could daddy fight him?" Brandon said very frightened thinking of the daddy he loved facing the most evil thing in the universe.

"Well that's because your daddy is not only brave and strong and full of the superpowers of the Holy Spirit but he also knows who he serves. He knew he could count on his Lord to back him up. He pulled the sword of the word out and declared. "AT THE NAME OF JESUS, EVERY KNEE SHALL BOW." "Just then daddy stepped aside and knelt putting his head covered with his helmet to his sword. From behind him Jesus stepped up and cast Satan away. Jesus spoke the word of God and banished the evil one from the battle and from our home forever. Then he put a barrier of protection around us so we can live here in peace and worship God and so daddy and I can raise you little stinkers to become mighty men of God just like daddy." Mommy finished the story tickling Brandon and Sean and making them giggle. "Oh now, you telling that old story of the battle with Satan again?" Daddy said walking through and smiling seeing his family playing together. "Daddy we want to be superheroes just like you!" Sean shouted jumping up to him for a hug. "You learn the Bible and how to pray and all the lessons you will learn at church and Sunday School (Junior Church) and Jesus will use you boys to battle evil too. Just you wait and see." Daddy said hugging them goodnight. The boys watched daddy the superhero walk away. To their eyes, he was just a regular dad, but even then, as he walked off, they thought they saw small flames shoot from his fingers.

(***Read Ephesians 6:10-18***


# இயேசுவும் தேவாலயமும்

இயேசு எருசலேம் தேவாலயத்தில்தான் குழந்தையாக பிரதிஷ்டை செய்யப்பட்டார். ( லூக் 2:27) இந்த தேவால யத்தில் தான் பன்னிரண்டு வயது சிறுவ னாக இருந்த போது இயேசு போதகர்கள் நடுவில் அமர்ந்து வேத வாக்கியங்களை தெளிவு படுத்தி விவாதித்தார். இயேசுஊழியத்தை துவங்கும் முன்பு நாற்பது நாட்கள் உபவாசம் செய்த போது இந்ததேவாலயத்தின் உச்சியில் தான் பிசாசானவன் இயேசுவை சோதித்தான். இந்த தேவாலயத்தில் இருந்து இயேசு பல முறை போதித்திருக்கிறார். இந்த தேவாலயத்தில் தான் பலரை சுகமாக்கியும் இருக்கிறார். காசுக்காரர்களை கண்டு கோபமடைந்து சவுக்கை உண்டு பண்ணி அவர்களை துரத்தியதும் இந்த ஆலயத்தில்தான்.



இந்த ஆலயத்தை இடித்து போடுங்கள் நான் அதை மூன்றாம் நாளில்எழுப்புவேன் என்று தேவதூஷணம் சொன் னார் என்று குற்றம் சாட்டி சிலுவையில் அறைந்தார்கள். சிலுவையில் அறைந்தபோது இந்த தேவாலயத்தின்திரைச் சீலைதான் இரண்டாக கிழிந் தது. இயேசு இந்த ஆலயத்தைக் குறித்துதான் தீர்க்க தரிசனமாக உன்னிடத்தில் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராத படிக்கு செய்யும் நாட்கள் வரும் எனறு குறிப்பிட்டார். இயேசு இந்த ஆலயத்தைப் பற்றி சொன்ன அந்த தீர்க்கத்தரிசனம் தான்கி.பி.70ல் அப்படியே நிறைவேறியது

***M.Nesamony***



## CHILDREN'S PLACE




We were therefore buried with him through baptism into death in order that, just as Christ was raised from the dead through the glory of the Father, we too may live a new life.

— Romans 6:4 NIV

### Children show your talent



## CHILDRENS' QUIZ FOR THE MONTH

### THE GOSPEL ACCORDING TO LUKE (11 to 15)

**1. Your will be done on _____________ as it is in________________**
a) Heaven, earth
b) Earth, heaven
c) Moon, heaven
d) Earth, moon



**2. Who is the ruler of the demons?**
a) Judas
b) Satan
c) Beelzebub
d) Evil Spirit

**3. According to Luke who is greater than King Solomon?**
a) Jonah
b) Queen of south
c) Beelzebub
d) Son of Man

**4. Which is unforgivable sin?**
a) Speaking a word against the son of man
b) Violation of Ten Commandments
c) Blasphemy against Holy Spirit
d) None of the above

**5. How to avoid anxious mind?**
a) Buy and store enough goods
b) Seek the kingdom of God first
c) Store enough crops and goods
d) Store enough food and clothing

**6. According to Jesus Christ whom we should invite for a feast?**
a) Friends
b) Brothers
c) Neighbors
d) Poor, Maimed, lame and blind

**7. When will be the second coming of son of man?**
a) At an hour after midnight
b) At an hour you do not expect

c) On full moon day
d) On a Christmas day

**8. "There will be joy in the presence of the angels of God" – When?**
a) When a lost coin is found
b) When a lost sheep is found
c) One sinner who repents
d) When there is a feast for poor

**9. If you confess Jesus before men, who will confess you before the angels of God?**
a) Disciples of Jesus
b) Son of Man
c) Holy Spirit
d) None of the above

**10. Where your treasure is there your __________ will be also.**
a) Heart
b) Mind
c) Peace
d) Future

***N.B: Dear Children, please indicate the chapter and verses against your answers and forward on or before 20th of this month***

.


## January Answers:

1. c –Desiples of Jesus
2. a - Poor
3. c - Glutton
4. d - Faith
5. a - Word of God
6. d – b and c
7. d – a and b
8. a – Hear Him
9. d – None of the above
10. c - Came and looked and passed by on the other side


## Children who answered correctly:

1. Annlin Sophia Nelson
2. Angelin Sophia Nelson
3. Dennis Roger
4. Jesvin Selvakumar
5. Diniya Sunshine
6. Mervin Samuel
7. Easterine Benedicta Raj
8. Joshika Vasrhni
9. Joshuva Koshy
10. Shelbino Pau
11. Jonathan Asher
12. Johan Sanjo
13. Jeremiah Alan
14. Jemima Ashni

***Congrats you have done all!!***



# SMILE



A smile lifts your spirits…
A smile removes your fears…
A smile improves your face value…
A smile always wins another smile!
So, don't stop when you feel a smile
Creeping upon you…
Let it come and spread on your face!
You will soon see that it reflects
on others' faces too !

***************

# வேத வினா விடைப் போட்டி – பிப்ருவரி 2018

(சங்கீதம் 109 முதல் 126 முடிய)

1. தேவ வசனத்தை தாவீது விளக்கிச் சொல்ல காரணமென்ன?
2. முதலாம் ஆரோகண சங்கீதம் யாது?
3. இரக்கம், மனஉருக்கம், நீதி இக்குணங்கள் உடையவர்கள் யார்?
4. மத்.21:9-ல் மேற்கோள் காட்டியிருக்கும் கூற்று சங்கீதங்களில் எப்பகுதியில் உள்ளது?
5. கர்த்தர் தன் ஜனங்களைச் சூழ்ந்து இருப்பதை எதனோடு ஒப்பிடுகிறார்?
6. கர்த்தர் செய்த உபகாரங்களுக்காக தாவீதின் பதிலளிப்பு என்ன?
7. கபட நாவிற்கு கிடைப்பது என்ன?
8. பூமி யாருக்காக கொடுக்கப்பட்டிருக்கிறது?
9. தாவீதின் ஆலோசனைக்காரர்?
10. சாபத்தை அங்கியாக உடுத்திக்கொள்வது யார்?

குறிப்பு: விடைகளுக்குரிய அதிகாரமும் வசனமும் குறிப்பிட்டு இம்மாதம் 20 ம் தேதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

**ஜனுவரி மாத விடை:**

1. செம்மையான இருதயத்தாருக்காக (97:11)
2. குழி முசல் (104:18)
3. மோசே (106:33)
4. கர்த்தருடையஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள்(92:15)
5. நியாயப்பிரமாணிகன்(108:8)
6. யோசேப்பு (105:17, 21)
7. 102
8. மோசே, ஆரோன், சாமுவேல்(99:6)
9. 93:1, 96:10
10. கர்த்தருக்குப் பயந்தவர்களின் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் (103:17)

**கடந்த மாத வேத வினா விடைப் போட்டியில் சரியான விடைகள் எழுதியவர்கள்**

1. திருமதி. பிப்லின் நெல்சன்
2. திருமதி. ஜெயின் ராஜவேல்
3. திருமதி. ஜெயந்தா ஜாண
4. திருமதி. எபென் A. பிரசாத்
5. திருமதி. சிந்துஜா சதீஷ்குமார்
6. திருமதி. அனிதா சுரேஷ்
7. திருமதி. ராதிகா செல்வகுமார்
8. திருமதி. ஹெப்சிபாய் நேசமணி
9. திருமதி. ஷகிலா ஜஸ்டின்
10. திருமதி. ஜோனிஷ் ஹெர்சில்
11. திருமதி. ஜமுனா ராஜன்
12. திருமதி. ஷீபா பிரகாஷ்

******************

## MOTHER



**B**eing a mother is a very important role that the Lord chooses to give to many women. Mothers are told to love their children in Titus 2:4-5 which says, “Then they can train the younger women to love their husbands and children, to be self-controlled and pure, to be busy at home, to be kind, and to be subject to their husbands, so that no one will malign the word of God.” Isaiah 49:15 says, “Can a mother forget the baby at her breast and have no compassion on the child she has born?”

Children are a gift from the Lord (Psalms127:3-5). In Titus 2:4, the Greek word phileoteknos appears. This word represents a special kind of “mother love.” The idea that flows out of this word is that of preferring our children, caring for them, nurturing them, affectionately

embracing them, meeting their needs, and tenderly befriending each one as unique from the hand of God.

Several things are commanded of both mothers and fathers in the Word:

Availability – morning, noon, and night (Deut.6:6-7)

Involvement – interacting, discussing, thinking and processing life together(Eph.6:4)

Teaching – the Scriptures, a biblical world-view (Psalm 78:5-6, Deut. 4:10, Eph. 6:4)

Training – helping a child develops skills and discovers his strengths (Prov. 22:6)

Discipline – teaching the fear of the Lord, drawing the line consistently, lovingly, firmly (Eph. 6:4, Heb. 12:5-11, Prov.13:24, 19:18, 22:15, 23:13-14, 29:15-17)

**Nurture** – Providing an environment of constant verbal support, freedom to fail, acceptance, affection, unconditional love, (Titus 2:4, 2 Tim. 1:7, Eph. 4:29-32, 5:1-2, Gal. 5:22, 1 Peter 3:8-9) Modeling with Integrity – living what you say, being a model by which a child can learn by "catching" the essence of godly living (Deut. 4:9, 15, 23; Prov. 10:9, 11:3; Psalm 37:18, 37).

The Bible never states that every woman should be a mother. However, it does say that those whom the Lord blesses to be mothers should take the responsibility seriously. Mothers have a unique and crucial role in the lives of their children.

Motherhood is not an unpleasant task. Just as a mother bears a child during pregnancy, and just as a mother feeds and cares for a child during infancy, so mothers also play an ongoing role in the lives of their children, teenagers, young adults, and even fully-grown children. While the role of motherhood must change and develop, the love, care, nurture, and encouragement a mother gives should never cease.

****************

## Worship Timings –February 2018

## Main Worship Hall – Oasis Hospital Campus, Al Ain .

| | | |
|---|---|---|
| First and Third Fridays | 7:00 PM | Communion Service |
| Second & Fourth Fridays | 7:00 PM | Regular Service |
| First and Third Fridays | 6.30 PM | Men's Prayer |
| Second & Fourth Fridays | 6.30 PM | Bible Study |
| Every Friday | 6.15 PM | Junior Church |

## REGULAR MINISTRIES @ PERSONAGE – Jahli

| | | |
|---|---|---|
| First Friday | 11:00 AM | Fasting Prayer |
| Second & Fourth Fridays | 07.00 PM | Gospel Ministry ( Camp visit) |
| Third Saturday | 07.30 PM | Women's Prayer |
| Last day of the Month | 11.30 PM | Month End & Beginning Prayer |

# Ash Wednesday

***Service on 14 -2-18 @ 0730 PM in Majilis hall***

*சென்ற மாத தொடர்ச்சி.........*

# வார்த்தை மாம்சமானது

## இரண்டு மனித இனம்

***ரோமர்6 : 5****ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்அ டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும்இணைக்கப்பட்டிருப்போம்.*

***கொலோ 1:13*** ***இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன் பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவைஸ்தோ த்திரிக்கிறோம்.***

வார்த்தை மாம்சமானதனால் இயேசு கிறிஸ்து **“ பிந்தின ஆதாம் Last Adam”** ஆனார். கடைசி ஆதாமாக அவர் மனுக்குலம் முழுவதையும் தன்னுள் கொண்டிருந்தார். வார்த்தை மாம்சமாகி, மரித்து உயிர்த்தெழுந்ததால் அவர் “**இரண்டாம் மனுஷன்**” என்று அழைக்கப்படுகிறார். ஆக இங்கே இரண்டு மனித இனங்களை பார்க்கிறோம். **ஒன்று ஆதாமில் தொடங்கிய மனித இனம். இது இயேசு கிறிஸ்து - வார்த்தை மாம்சமான போது - அவரில் தொடங்கி கல்வாரி சிலுவையில் முடிந்தது. மற்றொரு இனம் “புது சிருஷ்டி”, “மறுபடியும் பிறந்த இனம்”. உயிர்த்தெழுந்த இயேசுவில் தொடங்கி நித்தியம் வரையிலான மனித இனம்.** இந்த இனம்தான் இயேசுவோடு கூட நித்தியமாக உலகத்தை மீண்டும் ஆளுகை செய்யும்.

ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டபோது - நாம் அவருக்குள் இருந்தோம்.
ஆதாம் விலக்கப்பட்ட கனியை புசித்த போது – நாம் அவருக்குள் இருந்தோம்.
ஆதாம் கீழ்ப்படியாத போது நாம் – அவருக்குள் இருந்தோம்.
ஆதாம் பாவியான போது – நாம் அவருக்குள் இருந்தோம் -
**பழைய மனித இனம்.**

இயேசு கிறிஸ்து மரியாளின் கர்ப்பப்பையில் உருவானபோது – நாம் அவருக்குள் இருந்தோம்.
இயேசு கிறிஸ்து பெத்லகேமில் பிறந்த போது – நாம் அவருக்குள் இருந்தோம்.
இயேசு கிறிஸ்து தண்டிக்கப்பட்டபோது – நாம் அவருக்குள் இருந்தோம்.
இயேசு கிறிஸ்து மரித்த போது – நாம் அவருக்குள் இருந்தோம்.
இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த போது – நாம் அவருக்குள் இருந்தோம் -
**புதிய மனித இனம்.**

## தேவன் நமக்கு செய்வது எல்லாம் நமது ஆவியில் செய்கிறார்

சிருஷ்டிக்கப்பட்டவைகள் அனைத்தும் இயேசுகிறிஸ்துவின் மூலமாக சிருஷ்டிக்கப்பட்டது என்று எற்கனவே நாம் படித்தோம். அதாவது சகலத்தின் உற்பத்தி ஸ்தானம், மூலாதாரம் இயேசு கிறிற்து. ஒரு உதாரணத்துக்கு தண்ணீரை எடுத்துக்கொள்வோம். உலகத்தின் பல இடங்களில் தண்ணீர் இருக்கிறது.தண்ணீருக்கென்று பல குணங்களை தேவன் வைத்திருக்கிறார். தண்ணீரின் நிறம் என்ற குணத்தை எடுத்த்துக்கொள்வோம். தேவன் தண்ணீரின் நிறத்தை மஞ்சளாக மாற்ற வேண்டும் என்று நினைத்தால், உலகத்தில் இருக்கும் ஒவ்வொரு தண்ணீரையும் தேவன் மஞ்சளாக மாற்ற வேண்டியதில்லை, மாறாக இயேசு கிறிஸ்துவுக்குள் இருக்கும் தண்ணீரின் மூலதாரத்தில் தண்ணீரின் நிறத்தை மஞ்சளாக மாற்றினால் போதும். உடனடியாக உலகத்தில் இருக்கும் அனைத்து தண்ணீரும் மஞ்சள் நிறமாக மாறிவிடும்.

இது போல்தான் நமது ஆவியிலும் தேவன் மாற்றங்களை செய்கிறார். நாம் ஆவி, ஆத்துமா, சரீரம் என்று மூன்று பாகங்களை உடையவர்கள் ***(1 தெச 5:23 )*** இதில் நம்முடைய ஆவிதான் உண்மையில் “நாம்” ***( ரோமர் 8:9 ).*** **நமது பழைய மனிதன் இயேசுவோடு கூட சிலுவையில் அறையப்படுவது, மரிப்பது,உயிர்த்தெழுவது எல்லாம் நமது ஆவியில் சம்பவிப்பவை.** இவைகள் அனைத்தும் நம் ஒவ்வொரு வருக்குமாக தனித்தனியாக சம்பவிப்பவை அல்ல.தேவன் இயேசு கிறிஸ்துவுக்குள் நமக்காக செய்யும் நிகழ்வுகள். நாம் விசுவாசித்தாலும், விசுவாசிக்காவிட்டாலும் இவற்றை தேவன் இயேசுவுக்குள் செய்தார்.நாம் விசுவாசிக்கும்போது அந்த நிகழ்வுகள் நமக்கு உரியவனவாகின்றன. அதன் பலன்களும் நமக்கு உரியவனவாகின்றன.

ஒப்புக்ககொடுத்து, "உம்முடைய வார்த்தையின்படி" அதாவது "தேவனிடத்தில் இருந்து காபிரியேல் தூதன் மூலமாக அனுப்பப்பட்ட வார்த்தையின்படி" **எனக்கு ஆகக்கடவது** என்று விசுவாசத்தோடு சொன்ன போது, சொன்ன அந்த வினாடி **"வார்த்தை மாம்சமானது"** – அதாவது மரியாள் இயேசு கிறிஸ்துவை கர்ப்பம் தரித்தார்.

### வார்த்தை மாம்சமானதால் மனிதருக்கு என்ன பயன் ?

ஒரு மனிதன் சாதாரணமாக ஒரு முறைதான் மரிக்க முடியும். அதாவது அவனது ஆவியும் ஆத்துமாவும் அவனது சரீரத்தை விட்டு பிரிந்து செல்லுதல்.

***எபி 9:27*** *அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே,*

ஆதாமுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, பாவியாக்கப்பட்டு, பாவியாய் மரிக்கும் மனிதன், பின் நியாயத்தீர்ப்பின் நாளில் நித்திய மரணத்துக்குள் தள்ளப்படுவான்.இதுதான் அவனது முடிவு.

ஆனால் ஆதாமுக்குள் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன், இயேசு கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டு, அவரோடு மரித்து, அவரோடு மீண்டும் புதிய ஒரு மனிதனாக **"மறுபடியும் பிறக்க முடியும்".** ***( ரோமர் 6:1-12 )***

***யோவான் 3:3*** *இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக :ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவேமெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.*

வார்த்தை மாம்சமானதன் மகாப்பெரிய ஆசீர்வாதம் இது. இப்போது எந்த மனிதனும் நித்திய நரகத்துக்கு செல்ல வேண்டியது இல்லை.

எப்படி மரியாள் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொண்ட போது இயேசு கிறிஸ்து அவருக்குள் பிறந்தாரோ, அப்படியே நாமும் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளும் போது இயேசு கிறிஸ்து நமக்குள் பிறக்கிறார் – அதாவது இயேசு கிறிஸ்துவின் ஆவியை நாம் பெற்றுக்கொள்ளுகிறோம்.மறுபடியும் பிறக்கிறோம்.

***ரோமர் 8:9*** *தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.*

இந்த ஆவிதான் நம்முடைய மறுபடியும் பிறந்த ஆவி. இந்த ஆவியை உடையவன்தான் இயேசு கிறிஸ்து ***யோவான் 3:3*** ல் சொன்ன **"மறுபடியும் பிறந்தவன்".** ***( யாக் 1:18: 1 பேதுரு 1:23 ).***

வார்த்தை மாம்சமானதனால் – இப்போது யாரும் தரித்திரனாக இருக்க வேண்டியதில்லை, யாரும் ஐசுவரியவானாக இருக்க முடியும் ***( 2 கொரி 8:9 ).***

வார்த்தை மாம்சமானதனால் – இப்போது யாரும் நோயாளியாக இருக்க வேண்டியதில்லை, யாரும் ஆரோக்கியமாக இருக்க முடியும் ***( 1 பேதுரு 2:24 ).***

வார்த்தை மாம்சமானதனால் – இப்போது யாரும் பிரச்சினைகளோடு இருக்க வேண்டியதில்லை, யாரும் சமாதானமாக இருக்க முடியும் ***( ஏசாயா 53:5 )***

வார்த்தை மாம்சமானதனால் – இப்போது யாரும் பாவியாய் இருக்க வேண்டியதில்லை, யாரும் ஞானியாக, நீதிமானாக, பரிசுத்தவானாக, மீட்கப்பட்டவராக

இருக்க முடியும் ( 1 கொரி 1:30 ).

வார்த்தை மாம்சமானதனால் – இப்போது யாரும் பாவங்களுக்கான தண்டனையை தேவனிடம் இருந்து பெற வேண்டியதில்லை, யாரும் மன்னிக்கப்பட்டு தேவனுடைய மகனாக வாழலாம் ( ரோமர் 8:14 )

வார்த்தை மாம்சமானதனால் – இப்போது மறுபடியும் பிறந்த யாரும் பாவத்திடம் தோற்று வாழ வேண்டியதில்லை, இயேசுவைப்போல் எவ்விதத்திலும் பாவம் இல்லாமல் இருக்கலாம் ( 1 யோவான் 4:17; யோவான் 14:12 )

வார்த்தை மாம்சமானதனால் – இப்போது யாரும் பழைய மனிதனாக நரகம் செல்ல வேண்டியதில்லை, யாரும் இப்போது புதிய சிருஷ்டியாக பரலோகம் செல்லலாம் (யோவான் 3:3).

இது மனுக்குலத்துக்கான மகாப்பெரிய நற்செய்தி. இதை அனவருக்கும் அறிவிப்போம்.

**முற்றும்.**

*Lent is like a long 'retreat'*
*during which wecan turn back into*
*ourselves and listen to the voice of God*
*in order to defeat the temptations of the*
*Evil One. It is a period of spiritual 'combat'*
*Which we must experience alongside Jesus,*
*"not with pride and presumption, but using*
*the arms of faith: prayer, listening to the*
*Word of God and penance. In this way we*
*will be able to celebrate Easter in truth,*
*ready to renew the promises*
*of our Baptism."*

# BIRTHDAY CELEBERANTS- Feb 2018

| S.No | Date | Name | Contact |
|---|---|---|---|
| 1 | 12-02-18 | Rev.M.Christopher Rajendran | 056 710 5082 |
| 2 | 13-02-18 | Master.S.Jensin Bose | 050 233 4421 |
| 3 | 14-02-18 | Ms.Jainy John | 050 245 5266 |
| 4 | 17-02-18 | Mr.Sunith Samuel | 056 547 3326 |
| 5 | 22-02-18 | Ms.Jeyantha Belfer | 055 730 9275 |
| 6 | 24-02-18 | Ms.P.Sherine Carol | 050 573 6697 |
| 7 | 25-02-18 | Mr.Giftus Marvin | 050 5237237 |
| 8 | 25-02-18 | Baby. Hazal Hartlyn | 056 252 4659 |
| 9 | 25-02-18 | Ms.Mukila Ravichandran | 056 641 1363 |

# WEDDING ANNIVERSARIES –Feb 2018

| S.No | Date | Name | Contact |
|---|---|---|---|
| 1 | 3-02-18 | Mr. Augustin.J<br>Mrs.Nithya | 055 619 9268 |
| 2 | 11-02-18 | Mr.Justin Oliver<br>Mrs.Sahila Grace Justin | 050 573 7096 |
| 3 | 24-02-18 | A.Ravichandran<br>Mrs.R.Muneeswari | 056 641 1363 |

Best Wishes

# DAILY BIBLE READING FEBRUARY-2018

"Your word is a lamp to my feet and light for my path" Ps.119:105

| Date | Day | Morning | Evening |
|---|---|---|---|
| 1 | Thu | Mark 4 | Genesis 33 |
| 2 | Fri | Mark 5 | Genesis 34 |
| 3 | Sat | Mark 6 | Genesis 35 & 36 |
| 4 | Sun | Mark 7 | Genesis 37 |
| 5 | Mon | Mark 8 | Genesis 38 |
| 6 | Tue | Mark 9 | Genesis 39 |
| 7 | Wed | Mark 10 | Genesis 40 |
| 8 | Thu | Mark 11 | Genesis 41 |
| 9 | Fri | Mark 12 | Genesis 42 |
| 10 | Sat | Mark 13 | Genesis 43 |
| 11 | Sun | Mark 14 | Genesis 44 |
| 12 | Mon | Mark 15 | Genesis 45 |
| 13 | Tue | Mark 16 | Genesis 46 |
| 14 | Wed | Luke 1:1 -38 | Genesis 47 |
| 15 | Thu | Luke 1:39-80 | Genesis 48 |
| 16 | Fri | Luke 2 | Genesis 49 |
| 17 | Sat | Luke 3 | Genesis 50 |
| 18 | Sun | Luke 4 | Exodus 1 |
| 19 | Mon | Luke 5 | Exodus 2 |
| 20 | Tue | Luke 6 | Exodus 3 |
| 21 | Wed | Luke 7 | Exodus 4 |
| 22 | Thu | Luke 8 | Exodus 5 |
| 23 | Fri | Luke 9 | Exodus 6 |
| 24 | Sat | Luke 10 | Exodus 7 |
| 25 | Sun | Luke 11 | Exodus 8 |
| 26 | Mon | Luke 12 | Exodus 9 |
| 27 | Tue | Luke 13 | Exodus 10 |
| 28 | Wed | Luke 14 | Exodus<br>11: 1 - 12:21 |